நல்லவைகளை எடுத்துக்காட்டி, ஆட்சியினிடத்தில் இருக்கிறகுறைகளையும் சுட்டிக்காட்டி, குறைகளைப் போக்கவும், குற்றங்களை அகற்றவும் ஆன நல்ல பல நிலைமைகளை உருவாக்க எல்லோரும் பணியாற்றி கருத்துக்களை எடுத்து வழங்கும் ஓர் இடமாகச் சட்டமன்றம் அமைந்திருக்கிறது. ஆகவேதான் இந்த இடம் மிகச் சிறப்பான முறையில் பயன்பட வேண்டுமானால் நாம் எண்ணுகின்ற எண்ணங்கள் எல்லாம் மிக நல்ல முறையில் ஈடேறவும் இந்த அவை பெரும் பெயரும், புகழும் பெறவும் நல்லதொரு வாய்ப்பும் வசதியும் உடைய இடம் ஆகும்.

அதற்கு இந்த அவை முழு ஒத்துழைப்பு தரும் என்ற வகையில், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களோடும், பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களோடும் இணைந்து பணியாற்றி, பிறகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களோடும் இணைந்து பணியாற்றி, இப்போது புரட்சித் தலைவி அவர்களோடும் இணைந்து பணியாற்றுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிமிக்க ஒன்றாகும். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட அரும்பெரும் பணிகள் சிறந்து நீடித்து நடைபெறுவதற்கு உதவியாக நீங்கள் தந்திருக்கின்ற ஆதரவும், பாராட்டுரைகளும், போற்றுரைகளும் எனக்கு மேலும் மேலும் வலுவூட்டும். தளர்வு ஏற்படுகின்றபோதெல்லாம் இத்தகைய சிறந்த சொற்கள், ஆதரவான, அரவணைப்பான சொற்கள் எனக்குப் பயன்படும் என்று சொல்லி, எனக்குப் பாராட்டுரைகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்த மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மற்ற அனைத்து மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உள்ளபடியே தமிழ் வளரவும், தமிழர்கள் மேம்பட்டு ஓங்கவும் தமிழ்நாடு வளம்பெற்று நலம்பெற்றுத்திகழவும், இந்தியா எல்லா வகையிலும் சிறப்புற்று ஓங்கி, உலகத்தில் நல்லதொரு இடத்தைப் பெற்றுத்திகழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படவும் அப்படிப்பட்ட நல்லதொரு சூழ்நிலை ஏற்படுமானால் அவை நமக்குப் பெரு மகிழ்ச்சி தருவதாக அமையும் என்ற சொற்களைக் கூறி, மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து இத்துடன் முடிக்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி),

3. தகவல் கோரல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் தொடர்ந்து பெருமழை பெய்ததால் ஏற்பட்டுள்ளச் சேதங்களைப் பார்வையிட குழு அனுப்ப வேண்டியதன் அவசியம் குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1 1/2 மாத காலமாக கன்னியாகுமரி

மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வந்த மழையின் காரணமாக குறிப்பாக கடந்த 2, 3 தினங்களாகப் பெய்த பெருமழையின் காரணமாக மாவட்டத்தில் பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள வாழைகள் அழிந்தும், ரப்பர்கள் பாதிக்கப்பட்டும், சாலைகள் சீரழிந்தும் கடலில் மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவ நண்பர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாமல் அவர்களுடைய கட்டுமரங்கள், போட்டுகள் பாதிக்கப்பட்டு, இப்படி மாவட்டம் முழுவதும் பல கோடிக்கணக்கில் ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

9-55 மணி

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கருணைகூர்ந்து, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்கு ஒரு குழுவை நியமித்து, அந்த மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் களைய எல்லாத் துறைகளிலும் வேகமாகச் செயல்பட வேண்டுமென்று எண்ணிச் செயல்படும் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள குறைகளைக் களையவும் முழு முயற்சிகளை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. லாரன்ஸ் அவர்களும் இதே பிரச்சினை குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களும் இந்தப் பிரச்சினையை எழுப்பியதாகக் கருதிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர் திரு. லாரன்ஸ் அவர்களும் எழுப்பிய பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு உடனடியாக, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட ஒரு குழுவை ஏற்படுத்தி அனுப்புவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்